DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 87/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : கருப்பையா (P.w.14)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day of May 2026

( எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது ) .

**முதல் விசாரணை :–**

நான் தற்போது திருச்சுழியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பத்தை எங்கே எப்போது வைத்து செய்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. (**அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பங்கள் மட்டும் அசாஆ8 மற்றும் அசாஆ9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அ.த.கு.வி :–**

கடந்த 07.05.2016ம் தேதியன்று காலை 05.45 மணிக்கு நானும் சத்தியமூர்த்தி என்பவரும் டீ குடிப்பதற்காக திருச்சுழி காவல் நிலையம் வழியாக சென்றபோது திருச்சுழி வட்ட காவல் ஆய்வாளர் எங்களிடம் வந்து பல்வேறு குற்ற வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளான குமரேசன், மேழிச்செல்வம் என்ற பிணந்தின்னிச்செல்வம், சைவம் ஆகியோர்களை காவல் நிலையத்தில் வைத்திருப்பதாகவும் மேற்படி வழக்குகள் சம்பந்தமாக விசாரிப்பதாகவும் அதில் சாட்சிக்காக உடன் இருக்குமாறும் அழைத்ததின்பேரில் நாங்கள் இருவரும் ஆய்வாளருடன் காவல் நிலையம் சென்றோம் என்றும், எதிரிகள் மூவரையும் காவல் ஆய்வாளர் எங்களுக்கு அடையாளம் காண்பித்ததாகவும், பின்னர் காலை 6.00மணிக்கு குமரேசன் என்பவரை காவல் ஆய்வாளர் விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து எந்தவித தொந்தரவுமின்றி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து அதில் கையொப்பமிட்டார் என்றும் பின்னர் காலை 9.00மணிக்கு சைவம் என்பவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், எதிரிகள் தங்களை அழைத்துச் சென்றால் குச்சம்பட்டி பஸ்டாப்பில் மறைத்து வைத்திருக்கும் நகையை எடுத்து தருவதாகவும் மேலும் மதுரைக்கு அழைத்துச் சென்றால் வெங்கடாஜலபதி என்ற பதியை அடையாளம் காட்டுவதாகவும் ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தார் என்றும் அதில் நானும் சத்தியமூர்த்தியும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும் பின்னர் 08.05.2016ம் தேதியன்று பகல் 12.10மணிக்கு அழைத்துச் சென்றபோது மேற்படி எதிரிகள் குச்சம்பட்டி பஸ் ஸ்டாப்பிற்கு பின்னால் திருச்சுழி

பாட்டியிடம் அறுத்த செயினை புதைத்து வைத்திருக்கும் இடத்தை அடையாளம் காண்பித்தார்கள் என்றும் பின்னர் நாங்கள் மதுரை கீரைத்துறை மேலத்தோப்பில் வசித்துவரும் வெங்கடாஜலபதி என்ற பதி வசித்து வரும் வீட்டிற்கு சென்றபோது ஏற்கனவே மேற்படி நபர், சொத்துக்களுடன் தலைமறைவாகிவிட்டதாக தெரியவந்ததால் நாங்கள் அனைவரும் எதிரிகள் மற்றும் சொத்துடன் 08.05.2016ம் தேதி மாலை 5.00 மணிக்கு திருச்சுழி காவல் நிலையம் வந்ததாகவும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எ.த.கு.வி –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.